**ஹிக்கடுவ நகர சபை - 2022**

**-----------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹிக்கடுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹிக்கடுவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிக்கடுவ நகர சபைக்காக கணினி மென்பொருள் முறைமையொன்று கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,895,125 இற்கான செலவு தொட்டுணர முடியாத சொத்தொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 2,443,972 தொகைக்கான கட்டிட நிர்மாண வேலைகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பொதுச் சந்தையில் 07 கடையறைகள் தொடர்பாக கிடைத்திருந்த ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 2,106,060 தொகை வைப்புக் கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2015, 2016 மற்றும் 2019 ஆண்டுகளுக்குரிய 02 வருட கால வரையறையை மிகைத்துள்ள ரூபா 36,727,100 இற்கான முத்திரைக் கட்டண மிகை ஒதுக்கத்தை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோருக்காக கொடுப்பனவு செய்திருந்த ரூபா 465,879 இற்கான தொகை நிர்மாண வேலைக் கடன்கொடுத்தோர் என மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 17,383,830 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | வித்தியாசங்களை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 ஜூலை 10 திகதி 02/2015 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 07 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | 03 வாகனங்கள் திருத்த வேலைகள் மேற்கொண்டு பயன்படுத்தப்படுகின்றது எனவும் மற்றும் ஏனைய வாகனங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 9,964,982 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 20,102,835 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 21,176,683 | 21,729,523 | 26,538,285 | 42,317,680 | 26,546,450 | 21,259,116 | 14,657,190 | 47,126,442 |
| வாடகை | 6,033,080 | 6,870,525 | 6,823,862 | 4,307,826 | 8,792,920 | 7,150,160 | 7,464,662 | 4,261,163 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 935,000 | 565,375 | 565,375 | 48,355 | 815,000 | 344,160 | 346,155 | 48,355 |
| ஏனைய வருமானங்கள் | 6,776,000 | 4,002,879 | 4,002,879 | - | 6,048,000 | 238,321 | 238,321 | - |
| மொத்தம் | 34,920,763 | 33,168,302 | 37,930,401 | 46,673,861 | 42,202,370 | 28,991,757 | 22,706,328 | 51,435,960 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 51,435,960 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 46,673,861 தொகையாக இருந்தது. | நிலுவை வருமானம் எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி வருமானம் ரூபா 47,126,442 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அது ரூபா 42,317,680 தொகையாக இருந்தது. 25 வீதவரி உரிமையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 100,000 தொகையினை மிகைத்த நிலுவை | நிலுவை மீதிகளை எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிகளின் பெறுமதி ரூபா 5,367,116 தொகையாக இருந்தது. | | |
| (இ) | சபைக்குச் சொந்தமான 09 கடையறைகளை 2017 ஆண்டு முதல் டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஹிக்கடுவ நகர சபைக்கு சொந்தமான 84 கடையறைகளில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்ததுடன், அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், சபை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் முத்திரைக் கட்டணத்திற்காக ரூபா 75,806,212 தொகை பெற வேண்டியிருந்தது. | கடிதங்கள் மூலம் காலி காணிப் பதிவகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டின் போது ரூபா 1,200,000 தொகை செலவிடப்பட்டு குப்பைகளை துண்டுகளாக்கும் இயந்திரம் ஒன்று எடுத்து வந்து பொருத்தப்பட்டிருந்தது. இந்த இயந்திரம் சபையின் குப்பை முகாமைத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், சபையிடம் குப்பை முகாமைத்துவம் தொடர்பாக நீண்ட கால திட்டமொன்று காணப்படவில்லை. | இயந்திரப் பொறியியலாளர் மூலம் இயந்திரத்தை பரிசோதனை செய்து அறிக்கையொன்று சமர்ப்பிக்கும் படி நகர சபையினால் வேண்டப்பட்டுள்ளது என. | சொத்துக்கள் மூலம் பயன்படுத்த வேண்டியதுடன், குப்பை முகாமைத்துவத்திற்காக வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2005 ஆண்டில் ரூபா 300 இலட்சம் தொகை மற்றும் 2017 ஆண்டின் ரூபா 7,570,456 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹிக்கடுவ பொதுச் சந்தைக் கட்டிடத்தின் மேல் மாடி 2006 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | சிற்றுண்டிச்சாலை ஒன்றாக மாற்றுவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என. | சொத்துக்களை ஆக்கபூர்வமான விடயங்களுக்காக பயன்படுத்த வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மே 09 திகதி கொழும்பிற்கு சென்றுவிட்டு மீண்டும் சபைக்கு வரும் போது சபைக்கு சொந்தமான ரூபா 6,400,000 தொகை பெறுமதியான வேன் வண்டி கிளர்ச்சிக்காரர்களினால் முழுமையாக அழிக்கப்பட்டிருந்ததுடன், நட்டம் தொடர்பாக நி.பி. 104 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரணைக்காக குழுவொன்று நியமித்தல் தொடர்பாக அறிவுரைக்காக செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சேதங்கள் தொடர்பான அறிக்கையொன்று பெற்றுக்கொள்ள முடியுமாகும் என. | விசாரணையொன்று மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்கு ஏனைய நிறுவனங்களில் இருந்து வழங்கியிருந்த ரூபா 6,040,000 தொகை 04 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 02 டேலர்களை உரித்தாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், செய்பணிகள் மற்றும் மூலதன வேலைகளின் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹிக்கடுவை நகர சபையின் சேவைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக நிறுவப்பட்டிருந்த ரூபா 1,945,000 இற்கான 02 மென்பொருள் முறைமைகள் 01 வருடம் 09 மாதங்களும் செயற்படுத்தி இருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் செயற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என. | அலுவலக விடயங்கள் வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு மென்பொருள் முறைமையை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | ஹிக்கடுவ நகர சபைக்குச் சொந்தமான கொஹுஅம்பே விளையாட்டுத் திடலை மண் நிரப்பி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 833,007 தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும், 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், விளையாட்டுத் திடலின் ஒரு பகுதியில் வெளியிலிருந்து எடுத்துவரப்படும் குப்பைகள் போடப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் விளையாட்டுத் திடலில் இடப்பட்டிருந்த குப்பைகள் அகற்றப்பட்டதெனவும். | ஒப்பந்தக்காரருடன் உடன்பட்டவாறு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள, இடமாற்றம் பெற்றுள்ள சென்றுள்ள, சேவை இடை நிறுத்தப்பட்டுள்ள 16 ஊழியர்களிடம் ரூபா 949,601 இற்கான கடன் மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | குறிப்பிட்ட கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |